1979 பிப்ரவரி 26]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொசு ஒழிப்புத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து நமக்கு வரும் மானியம் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அப்படி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் உரையாற்ற இருக்கின்ற காரணத்தால் கேள்வி நேரத்தை ஒரு மணி நேரத்திற்குள் முடித்துக் கொள்வது நல்லது. எனவே, அதிகமாக துணைக் கேள்விகள் போடாமல் இருந்தால் நலமாக இருக்கும். நான் அதிகமான துணைக் கேள்விகளை அனுமதிக்கவில்லை என்று யாரும் வேதனைப்பட வேண்டாம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : ஒரு விளக்கம். எங்களைப் பொறுத்தவரை சரி. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் 3 மணி நேரம் பேசினால், முதலமைச்சர் 6 மணி என்றெல்லாம் எங்களுக்குத் தகவல் வருகின்றது. நான் 5 மணிக்கு ஊருக்குச் செல்வதற்காக பயணச்சீட்டை வாங்கி வைத்துள்ளேன். ஆகவே, இந்த நேரம் ஒதுக்குவதிலே அவர்கள் விஷயத்திலும் கடைப்பிடித்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இருவரும் இந்த அவையிலே இருக்கும்போது சொன்னால் நலமாக இருக்கும், எனக்கு துணையாக இருக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்கள் இருக்கும்போதும் சொல்கிறேன்.

ஜோலார்பேட்டை அருகே இரயில்வே மேம்பாலம்.

*வினா எண். 167— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வாணியம்பாடி ரோட்டிலிருந்து நாட்றம்பள்ளிக்கு பிரிந்து செல்லும் சாலையின் குறுக்கே ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்ஷன் அருகில் மேம்பாலம் கட்ட இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தச் சாலையின் குறுக்கே ரயில்வே கேட் உள்ளதால், இந்த ரயில்வே கேட் ஜோலார்பேட்டையிலே இருப்பதால், அடிக்கடி ரயில் போக்குவரத்தும், கூட்ஸ் போக்குவரத்தும் இருப்பதால், அந்தப் பகுதி மக்கள் இந்தக் கேட்டைக் கடந்துதான் திருப்பத்தூருக்கோ அல்லது வேலூருக்கோ செல்லவேண்டி இருப்பதால், இந்த ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால், இந்த முக்கியத்துவங்களைக் கொண்டு, இந்தச் சர்க்கார் இதைப் போக்குவதற்கு உடனடியாக அங்கே மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்த அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மேம்பாலத்தைப் பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை. லெவல் கிராசிங்கில் மேம்பாலம் முக்கியமான இடங்களில் தேவையின் அடிப்படையில் கட்டப்பட வேண்டுமென்று, அந்த அடிப்படையில் இந்த அரசினுடைய பரிந்துரைகள் அவ்வப்போது மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால், மத்திய அரசைப் பொறுத்தவரையில் கடந்த 3 ஆண்டுகளாக எந்த லெவல் கிராசிங்கிலும் மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி தரவில்லை. இப்படி நிதி ஒதுக்கீடு தரப்படாமல் இருப்பதால், மாநில அரசு பலமுறை மத்திய அரசை இதுபற்றி வலியுறுத்திக் கொண்டு வருகிறது. மேலும் வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் பற்றி மத்திய அரசுக்கு இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா? அப்படிச் செய்யவில்லையானால், உடனடியாக இந்தப் பரிந்துரையைச் செய்து, இதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட மிக முக்கியமான பல பாலங்கள் 3 ஆண்டுகளாக பரிந்துரை செய்யப்பட்டும் மத்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை. தாங்கள் சொல்லும் முக்கியத்துவத்தைப் பற்றியும் பரிசீலனை செய்து, ஆய்வு செய்து அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

லாரிகளுக்கு தேசிய அளவிலான உரிமங்கள்.

* வினா எண் 168—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சரக்கு ஏற்றும் லாரிகளுக்கு தேசிய அளவில் பர்மிட் கோரி அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா?

(ஆ) என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?